[27th September 1958

Touring cinemas

* 564 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of appeals filed before the Board of Revenue (Land Revenue) under the Madras Cinemas (Regulation) Act, 1955, during the year 1957–58 against the grant of licences to run touring cinemas issued by the District Collectors;

(*b*) whether new entrants are encouraged under the Act and rules;

(*c*) whether any lacuna has been pointed out in the rules by the High Court in the matter of granting licence ; and

(*d*) whether the Government propose to amend the rules accordingly ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 47.

(*b*) Yes, Sir.

(*c*) No, Sir.

(*d*) Does not arise.

SRI S. LAZAR : புதியதாக லைசென்ஸ் வாங்குகிறவர்களுக்கும் அனுமதி கொடுக்கப்படுவதாக சொல்லப்பட்டது. அனுபவம் உள்ளவர்களுக்கு பிரையாரிடி கொடுக்க வேண்டுமென்ற சட்டம் அமுலில் இருக்கிறது. அதை மாற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அனுபவம் உள்ளவர்களுக்கு கொடுப்பது என்பதும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம்தான்.

SRI A. V. P. ASAITHAMBI : சினிமா தியேட்டர்களை தேசீயமாக்குவதற்கு அரசாங்கத்தினிடம் திட்டம் இருக்கிறதா ? இல்லையென்றால், அப்படி ஒரு திட்டம் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்பேர்ப்பட்ட உத்தேசம் ஒன்றும் இல்லை.

SRI S. LAZAR : இது விஷயம், லைசென்ஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியில்லையென்றால், இனிமேலாவது அறிவிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எதாவது அறிவிக்க வேண்டும் என்று ஏற்பட்டால், அது கவனிக்கப்படும்.

Teaching of Gandhiji's Principles

* 565 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) (i) பள்ளி மாணவர்களுக்கு காந்தியடிகளின் சிறந்த தத்துவங்களைப் போதிக்க ஏதேனும் வகை செய்திருக்கிறார்களா ?

(ii) அப்படியானால் அதன் விபரமென்ன ?

(ஆ) (i) மத்திய அரசாங்கம் இவ்விஷயமாய் ஏதேனும் இந்த அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியதா ?

(ii) அப்படியானால் அதன் விபரமென்ன ?

27th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) (i) Yes.

(ii) A statement [a] is placed on the table of the House.

(*b*) (i) Yes.

(ii) A statement [b] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : பள்ளிக்கூட மாணவர்களுக்கெல்லாம் காந்திய இலக்கிய நூல்கள் கிடைக்கச் செய்ய ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள லைப்ரெரியில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? குறிப்பாக, மாணவர்கள் அந்த நூல்களைப் படிக்கச்செய்ய சந்தர்ப்பம் கொடுக்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள் இவற்றிலுள்ள லைப்ரெரிகளில் காந்தியவர்களின் நூல்களை வைக்க சர்க்காரே வாங்கிக் கொடுக்க உத்திரவு ஆகியிருக்கிறது. புத்தகத்தை வாங்கி வைக்கலாம், ஆனால் மாணவர்களை அவற்றைப் படிக்கும்படி செய்ய, நிர்பந்தம் செய்ய வழியில்லை.

SRI V. SUBBIAH : காந்திஜீயின் ஜீவிய சரித்திரமான சத்திய சோதனையையும், கீதைபற்றிய அனாசக்தி யோகத்தையும், பாட புத்தகங்களாக வைக்க சர்க்காருக்கு யோசனை உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பாட புத்தகமாக வைப்பது பற்றி, ஒரு கமிட்டி ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்தக்கமிட்டி பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

SRI A. GOVINDASAMY : காந்திஜியின் நூல்கள், காந்திய முறைப்படி கையால் செய்யப்பட்ட காகிதத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது குறிப்பிடப்பட்ட புத்தகங்கள் கையால் செய்யப்பட்ட காகிதத்தில் அச்சிடப்பட்டவைதாம்.

Last religious rites of a patient in a hospital

* 566 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government in April 1958 regarding a patient having been denied the opportunity of receiving the last religious rites by the authorities of the Tiruchirappalli Headquarters Hospital, when the patient specifically asked for it;

(*b*) the action taken by Government against the concerned authority ; and

(*c*) the steps taken to avoid such happenings in the future?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The complaint was found on enquiry to be groundless.

(*c*) Does not arise.

SRI S. LAZAR : ஸார், ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடியவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களுக்கு சில பொது உரிமைகள் கொடுக்கப்படவேண்டும். அம்மாதிரி உரிமை மறுக்கப்பட்டதாகப் புகார் சர்க்காருக்குவந்தும், சர்க்கார் அதன்மேல் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்?

---

[a] & [b] **Printed as Appendix III on pages 873–879 infra.**